**அக்கரைப்பற்று மாநகர சபை**
**அம்பாரை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி மாநகர முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) நிறுவனத்தின் நிலையான சொத்து வகுப்புகளாக காணிகட்டிடம் மற்றும் வீதிகள் என்பன வெவ்வேறாக காணப்படுகின்ற போதிலும் காணிகட்டிட மீதியானது வீதிகளின் கிரயம் ருபா 310,828 உள்ளடக்கியிருப்பதுடன் கட்டிட திருத்தச்செலவு ரூபா 526,054 ஒரு மூலதனச் செலவாக கருதப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய செலவுகள் உரிய கணக்குகளின் கீழ் காட்டப்படல் வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள காணி கட்டிட மீதியானது தவறுதலாக வீதிகளின் கிரயத்தினுள் பதிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனைதிருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன என்பதனை அறியத் தருகின்றேன். கட்டிட திருத்தச் செலவு கட்டிடத்தின் தளத்தின் மேலதிகமாக படை ஒன்று சேர்க்கப்பட்டமையால் அவை புதிய தொரு சேர்மானமாக கணிப்பிடப்பட்டு மூலதனச் செலவினமாக கருதப்பட்டுள்ளது. இது தவறாகையில் இதனை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| (ii) மாநகர சபையில் காணப்படுகின்ற 61 வாகனங்களில் 18 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு உரிய கணக்குகளின் கீழ் காட்டப்படல் வேண்டும். | மாநகர சபையில் கானப்படுகின்ற 61 வாகனங்களில் 18 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடுசெய்யப்படுவதற்கு குழு ஒன்றை நியமித்து மேற்படி வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து 2019 ஆம் ஆண்டிக்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) மீளாய்வாண்டில் 372 எண்ணிக்கையான | உரிய புத்தகங்களில் இருந்து | உரிய பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு பணம் பெறப்பட்ட போதிலும் சொத்துக்கள் மீதான பெறுமான தேய்வு ஏற்பாடு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட சொத்துக்களின் இழிவுப் பொருள் விற்பனை ரூபா.80,650 ஆக காணப்பட்ட போதிலும், இச்சொத்துக்களின் கிரயப்பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ல் வேண்டும். | மூலதன வருமானம் தொடர்பான கணக்கீட்டுத் தெளிவுகள் மற்றும் பதிவளிப்பிற்கான அனுமதிகள் பெறப்படும் வரையிலான பணிகள் இடம்பெற்றமையால் இவை பதிவளிப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இதனை திருத்தம் செய்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (iv) | மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அடையாளங்காணப்படாத வருமான வருமதிகளாக் நிதிக்கூற்றில் தொடர்ந்து காட்டபட்டு வரும் ரூபா 12,200 வரவுத்தொகையினை இம்மீளாய்வாண்டிலும் தீர்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (v) | 2018 திசெம்பர் 31 இல் சபையின் ஆயுள்வேத வைத்தியசாலையில் 18 வகையான மருந்துப்பொருட்கள் இருப்புக்களாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அவை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி கணக்குகளுக்கு உள்வாங்கப்படல் வேண்டும் | ஆயுள்வேத வைத்தியசாலைக்கான மருந்துப் பொருட்கள் பெறுவதற்கான நிதி உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து பெறப்படுவதனாலும் அவற்றிற்கு சபை நிதி செலவிடப்படுவதில்லை. மேலும் மருந்துப் பொருட்கள் பாவனைப்பொருள் பகுதியில் வைத்து நோக்கப்படுவதனால் அதனை இறுதிக் கணக்கு நிலுவையாக கணக்குகளில் காட்டப்படாது. சரக்கிருப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சித் திணைக்களத்திற்கும் ஆயுள்வேத திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்கப்படும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 218 | நிருவாகம் தொடர்பாக ஆணையாளரினால் ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய விபரமான அறிக்கை 2018 ஆம் ஆண்டு தொடர்பில் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிக்கான நிர்வாக அறிக்கை தயாரிக்கபட்டுவருகின்றது அவை நிறைவுற்றதும் அறிக்கை அனுப்பி வைக்கப்படும. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 105,000 தொகையான கேள்வி வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த தொகையில் இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையில் காணப்படுகின்ற கேள்வி வைப்புக்களை வருமானத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபபடுகின்றன. |
| (இ) மோட்டார் வாகன போக்கு வரத்துச் சட்டத்தின் 203ஆம் பிரிவு | ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும். எனினும் சபையின் பராமரிப்பில் காணப்படுகின்ற 12 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வருமான உத்தரவுப் பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களை திருத்தி புகைப்பரிசீலனை அறிக்கையை பெற்று வருமான உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மெற்கொள்ளப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 15,321,575 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 20,232,252 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை |
| | ரூபா“000” | ரூபா“000” | ரூபா“000” | ரூபா“000” | ரூபா“000” | ரூபா“000” | ரூபா“000” | ரூபா“000” |
| வீதவரிகள் | 10,100 | 19,083 | 7,463 | 36,870 | 10,100 | 10,095 | 5,533 | 25,249 |
| வாடகை | 16,558 | 13,021 | 12,887 | 11,434 | 15,194 | 14,314 | 12,139 | 15,720 |
| ஊரிமை கட்டணம் | 2,650 | 2,183 | 2,267 | - | 2,650 | 1,751 | 1,751 | - |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா.157,258,888 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 94,306,976 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 60% ஆக காணப்பட்டிருந்தது. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுத்தல் | எதிர்காலத்தில் நிலுவைகள் முழுவதையும் அறவீடுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் வாடகை நிலுவைகளை அறவிடுசெய்வதற்கான சட்ட நடவகெ்கைகள் மேற் கொள்ளபட்டுவருகின்றன. அதவை தொடர்பான தீர்ப்பக்கள் கிடைக்குமட் சமயத்தில் அதற்கேற்ப நிலுவைகள் தீர்ரபக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றன. |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் குடியிருக்கும் 12,873 குடியிருப்பாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட வேண்டிய ரூபா 44,332,364 கூட்டு மொத்தமான ஆதன வரிகளில் 17 வீதமான ரூபா 7,462,795 தொகையான ஆதன வரிகளே மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருந்தது. | சோலைவரி அறிவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

### 2.2.4 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 1992 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையான காலத்திற்கான குத்தகை ரூபா 16,178,257 தொகையில் 46 சதவீதமான ரூபா 7,503,388 தொகை மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான குத்தகை வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுத்தல் | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை அறவிடப்படவேண்டிய வியாபார நிலையங்களுக்கான வாடகை நிலுவை ரூபா 11,767,402 மொத்தமான தொகையில் 15 சதவீதமான ரூபா 1,815,600 நிலுவை தொகை மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. | ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவாக வாடகைத் தொகையினை உரிய காலத்தில் செலுத்தத் தவறியாதற்காக | பதில் சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை |

நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் சபை ஊழியர் மற்றும் ஒரு சனசமூக நிலையத்துக்கு வழங்கப்பட்ட ரூபா 106,003 தொகையான இரு முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணக்கொடுப்பனவுகளை தீர்பனவு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) மாநகர சபையில் இயங்கு நிலையில் காணப்படுகின்ற 31 மோட்டார் இயந்திரங்களில் 07 மோட்டார் வாகனங்களை தவிர ஏனைய 26 மோட்டார் வாகனங்கள் தொடர்பில் குறைந்த பட்சம் வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலும் எஞ்சிய 26 மோட்டார் வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை செய்வதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளபப்படும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, 44 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆளனி நிரப்புதல் தொடர்பாக உள்ளுராட்சி திணைக்களம் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு என்பனவற்றிற்கு அறிவிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) சபையினால் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் ஒருவரின் சேவையை பெற்றுக் கொள்ளப்படுகின்ற போதிலும் இப் பதவியணிக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள தவறியிருந்தது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இதனை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (இ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பதவி வறிதாக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 64,598 கடன் மீதியை அறவிடுவதற்கு அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு இன்று வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவி வெறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீட செய்வதற்கான ஏற்பாடுகள் நடவடிக்கைனகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) சபையினால் பேணப்படும் காசேட்டின்படி, வங்கியில் பொது நடைமுறை கணக்கு 2018 அம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை ஒவ்வொரு மாத இறுதியிலும் 16.3 மில்லியன் முதல் 20.8 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதிகள் காணப்பட்டன. சபை இதனை வருமானம் உழைக்கும் வகையில் முதலீடு செய்ய பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்காமை காரணமாக மீளாய்வாண்டில் அண்ணளவாக ரூபா 1,500,000 தொகையான வருமானத்தினை இழந்துள்ளது. | மேலதிக முதல் தொகையினை முறையாக அனுமானித்து வருமானம் உழைக்கும் குறுங்கால வைப்புகளில் இடுவதுனூடாக சபை வருமானத்கை அதிகரித்தல். | காசேட்டு மீதியானது சம்பள மீளளிப்பு, கேள்வி வைப்பு என்பனவற்றை உள்ளடக்கி இருப்பதனாலும் மேலும் சபையின் மீண்டுவரும் செலவினங்களை மேற்டிகொள்வதற்காகவு மட்டும் திரவத்தன்மையினை பேணவேண்டியுள்ளதனால் குறித்த தொகைப்பணம் காசு மீதியாக காணப்படுகின்றது. |
| (ஆ) மாநகர சபையின் 100470225924 இலக்கம் கொண்ட ரூபா 37,959 பெறுமதியான சேமிப்பு வைப்புக் கணக்கானது 2017 டிசம்பர் மாதத்திலிருந்து அறிக்கையிடும் திகதிவரை செயற்பாட்டில் காணப்படவில்லை. | மீளப்பெறுவதற்கான தீர்மானங்களை மேற்கொன்டு அதனை மீளப்பெறல் | மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. |
| (இ) 2013 ஆண்டில் சபையின் தீர்மானத்தின்படி செலவிலும் மிஞ்சிய வருவாயிலிருந்து குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கென ரூபா 15,000,000 ஒதுக்கீடானது 2018 ஆம் ஆண்டு வரை குறித்த ஒதுக்கத்திலிருந்து குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படாது, மீளாய்வாண்டில் இவ்வொதுக்கம் திரண்ட நிதியுடன் சேர்க்கப்பட்டிருந்தது. | நிதி ஒதுக்கீடுகளை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல். | வரிசை அமைச்சு நிதிகள் மற்றும் ஏனைய திட்டங்கள் மூலமான நிதகள் பயன்படுத்தப் பட்டமையினால் சபையின் இவ் ஒதுக்கம் பயன்படுத்தப்படவில்லை இதனால் தொடர்ந்து பின்நிதி திரண்ட நிதியாக மாற்றம் செய்யப்பட்டது. |
| (ஈ) மீளாய்வாண்டில் வியாபாரங்களுக்கான உரிமை வழங்கல் தொடர்பில் 635 வியாபாரங்களுக்காக ரூபா 2,183,100 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 250 வியாபாரங்களுக்கு மாத்திரமே உரிமை வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டில் 385 வியாபாரங்கள் சபையின் உரிமை வழங்கல் இன்றி நடைபெறுகின்றன. | வியாபாரங்களுக்கான உரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

### 3.4 சொத்து முகாமைத்துவம்

#### 3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்கேடுகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 5.3 மில்லியன்கள் பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் பெறுமதி கணிக்கப்பட்டிருக்காத மேலும் 05 வாகனங்களின் உரிமையினை மாநகர சபையின் பெயருக்கு மாற்றும் நடவடிக்கை கணக்காய்வுத் திகதியான 2019 மே 30 வரையிலும் நிறைவு பெற்றிருக்கவில்லை | உரிமையினை மாநகர சபையின் பெயருக்கு மாற்றும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சினால் கிடைக்கப்பெற்ற சகல வாகனங்களுக்குமான உரிமை மாற்றத்தின்பொருட்டு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டபோதிலும் சில வாகனங்களுக்கான உரிமை மாற்றம் கிடைக்கப்பெறவில்லை. இது தொடர்பாக விண்ணப்பத்தின் பிரதிகள் இணைத்து மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

#### 3.4.2 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டில் தீயணைப்பு பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கென ரூபா 19,882,270 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமொன்று நிர்மாண வேலைகள் நிறைவடையாத நிலையில் 05 ஆண்டுகளாக கைவிடப்பட்டு காணப்படுகின்றது. | வேலைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இக்கட்டிடத்தினை மீண்டும் தொடர்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை குறித்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருவதுடன் இது தொடர்பான எந்தக்கோவையும் எமது காரியாலயத்தில் பேணப்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றேன். |
| (ஆ) திண்மக்கழிவுகளை சேதனைப்பசளைகளாக மாற்றுவதற்கென 2018 ஆம் ஆண்டு ரூபா 999,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ள இயந்திரம் கணக்காய்வுத் திகதியான 2019 மே 30 வரை முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில | மீண்டும் அச்செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இம்மாதம் மீண்டும் அச்செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

### 3.4.3 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானத்தை பெறத்தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி வரை சபைக்குச் சொந்தமான 107 எண்ணிக்கையான கடைகள் மற்றும் அறைகள் வருமானம் உழைக்கும் வகையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது. மேலும், கணக்காய்வுத் திகதியான 30 மே 2019 வரை 105 கடைகள் பயன்படுத்தப்டாதிருந்தன. | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். | மீன் சந்தையில் அமைந்துள்ள கடை அறைகளுக்கு கடந்த காலப்பகுதியில் கேள்வி மனுக்கள் கோரிய போதிலும் அக் காலப்பகுதியில் எந்தவித விண்ணப்பங்களும் பெறப்படவில்லை. எனவே இவ்வருடத்திற்கான கேள்வி மனுக்கள் விரைவில் கோரப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

### 3.4.4 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபையில் இரு நீர்த்தாங்கிகள் டிரயிலர்கள், ஒரு செயின் எக்ஸவேட்டர், 03 மோட்டார் சைக்கிள்கள், 03 உழவு இயந்திரங்கள் மற்றும் ஒரு லொறி போன்ற 10 வாகனங்கள் பழுதுபார்க்கப்படாமல் மீளாய்வாண்டில் பாவணையற்று காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது திருத்தம் செய்ய முடியாதவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது திருத்தம் செய்ய முடியாதவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல். | பாவனையற்று காணப்படுகின்ற நீர்தாங்கி டிரெயிலர்கள் 02, செயின் எக்சவேட்டர் 01 மற்றும் மோட்டார் சைக்கிள்கள் 03, உழவு இயந்திரங்கள் 03 மற்றும் டிப்பர் வகை லொறி 01 போன்றனவற்றை அடையாளம்கண்டு திருத்துவதற்கு அல்லது விலை மதிப்பீ செய்வதற்கு சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படி சபையின் அறிக்கை பெறப்பட்டதும் உடனடியாக திருத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |